# J/Ilavalai meihandan m.v.
## Ilavalai

# Founder's day
# &
# Prize Giving

# நிறுவுநர் தினமும்
# பரிசளிப்பு விழாவும்

28.11.2004

உ
சிவமயம்

# யா/ இளவாலை
# மெய்கண்டான் மகா வித்தியாலயம்
## நிறுவுநர் நினைவு தினமும்
## பரிசளிப்பு விழாவும் - 2004

காலம்: 28.11.2004 ஞாயிற்றுக்கிழமை
நேரம் மு. ப. 10.00 மணி
இடம்: பாடசாலை ஏழூர் மண்டபம்

தலைவர்
திரு. அ. பேரம்பலம் அவர்கள் (அதிபர்)

ஆசியுரை
பிரம்மஸ்ரீ கு. நகுலேஸ்வரக்குருக்கள்
(ஆதீனகர்த்தா, நகுலேச்சரம், கீரிமலை)

பிரதம விருந்தினர்
திருமதி. றெஜீனா இருதயநாதன் அவர்கள்
(கல்விப்பணிப்பாளர், வலயம், வலிகாமம்)

சிறப்பு விருந்தினர்
திரு. ச. கைலாசநாதன் அவர்கள்
(கோட்டக்கல்விப் பணிப்பாளர், தெல்லிப்பழை)

நிறுவுநர் நினைவுரை
செஞ்சொற் செல்வர் திரு. ஆறுதிருமுருகன் அவர்கள்
(பிரதி அதிபர், யா:ஸ்கந்தவரோதயக் கல்லூரி)

நிறைவுரை
திரு. செ. பாலச்சந்திரன் (ஆசிரியர்)

உ
சிவமயம்

# அதிபரறிக்கை

## (2003 மார்கழி - 2004 கார்த்திகை வரை)

**கார்த்திகைத் தீபத் திருநாளில் கடவுள் பாதம் பணிந்து எனது உரையை ஆரம்பிக்கின்றேன்.**

ஆசியுரை வழங்கிய பிரம்மஸ்ரீ கு. நகுலேஸ்வரக்குருக்கள் அவர்களே,

பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பித்துக்கொண்டிருக்கும் வலிகாம வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன் அவர்களே,

சிறப்பு விருந்தினராக கலந்து விழாவை இனிதே சிறப்பிக்கும் தெல்லிப்பழைக் கல்விக் கோட்டகல்விப் பணிப்பாளர் திரு. ச. கைலாசநாதன் அவர்களே,

நினைவுப் பேருரையை ஆற்றொழுக்குப் போல் அழகாய் ஆற்ற வருகை தந்திருக்கும் யா/ ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் பிரதி அதிபர் செஞ்சொற்செல்வர் திரு. ஆறுதிருமுருகன் அவர்களே.

சகோதரப் பாடசாலையின் அதிபர்களே, ஆசிரியர்களே, எமது பாடசாலையின் ஆசிரியர்களே, மாணவமணிகளே, மதிப்பார்ந்த பெற்றோர்களே, நலன் விரும்பிகளே தங்கள் அனைவருக்கும் எனது இனிய வணக்கம் உரித்தாகுக.

வள்ளலார் ஏழூர் இராசரத்தினம் அவர்களின் உள்ளத்தில் முகிழ்த்த "அனைவருக்கும் கல்வி" எனும் நற்சிந்தனையில் தோற்றம் பெற்றதே இப்பாடசாலையாகும். அந்நிறுவுநரின் நினைவுநாளையும் பரிசளிப்பு நிகழ்வையும் ஒருமித்து நிகழ்த்திக் கொண்டிருப்பதில் பெரு மகிழ்ச்சியடையும் இவ்வேளையில் 2003 - 2004ஆம் ஆண்டிற்கான அதிபரறிக்கையைச் சமர்ப்பிப்பதில் பேருவகை அடைகின்றேன்.

எமது விழாவினை ஆசீர்வதித்து வாழ்த்துரை வழங்கி அமர்ந்திருக்கும் வணக்கத்துக்குரிய பிரம்மஸ்ரீ கு. நகுலேஸ்வரக் குருக்கள் அவர்களை வருக வருகவென இருகரம் கூப்பி வரவேற்கின்றேன். இன்றைய விழாவின் முதன்மை விருந்தினராகக் கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் வலிகாம வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன்

அவர்கள் சிறந்த முகாமையாளர்; உயர்ந்த சிந்தனையாளர். அவர்களையும் வருக வருக என இருகரம் கூப்பி வரவேற்கின்றேன்.

எமது தெல்லிப்பழைக் கல்விக்கோட்ட கல்விப்பணிப்பாளர் திரு. ச. கைலாசநாதன் அவர்கள் சிறந்த நிர்வாகி, பன்முக ஆற்றல் நிறைந்தவர். அவர் இன்று சிறப்பு விருந்தினராக கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கிறார். அவரையும் வருக வருக என வரவேற்பதில் பெருமகிழ்வு எய்துகின்றேன்.

நினைவுப் பேருரை நிகழ்த்த வருகை தந்திருக்கும் செஞ்சொற்செல்வர் திரு. ஆறுதிருமுருகன் அவர்கள் உலகறிந்த பேச்சாளர்; சிறந்த நல்லாசிரியர். அவரின் பேருரையைக் கேட்டு மகிழ இருக்கின்றோம். அவர்களையும் வரவேற்பதில் மன நிறைவு எய்துகின்றேன்.

இன்றைய நிகழ்வில் கலந்து சிறப்பித்துக்கொண்டிருக்கும் சகோதரப் பாடசாலை அதிபர்கள் ஆசிரியர்கள், பெற்றோர்கள் மாணவமணிகள், நலன்விரும்பிகள் அனைவரையும் வருக வருக என வரவேற்பதில் மனமகிழ்வு அடைகின்றேன்.

# ஆசிரிய ஆளணி

சேவைக்கென்று தேய்ந்து மணக்கும் சந்தனத் தருவே ஆசிரியர். எமது மாணவர்களின் கல்வித்தாகம் தணிக்கும் ஊருணியாக நின்று உழைக்கும் செயற்றிறன்மிக்க எமது ஆசிரியர் குழாத்தில் 20 பேர் உறுப்பினராக விளங்குகின்றனர். இவ் வருடம் நமது ஆசிரியர் குழாத்தில் ஆரம்பக் கல்வி ஆசிரியர்களான திரு.தி.பரமேஸ்வரன் அவர்களும் செல்வி. கை. கங்கா அவர்களும் உப அதிபராகக் கடமையாற்றும் திரு. ச. சிவானந்தராசா அவர்களும் திருமதி. ம. சத்தியகுமாரி அவர்களும் (மனையியல்) திரு. செ. ஆனந்தீஸ்வரன் அவர்களும் (கணிதம்) புதிதாக இணைந்து கொண்டனர்.

அதேவேளை வர்த்தகப்பட்டதாரி ஆசிரியரான திரு. நா. பிரணவரூபன் அவர்களும் பயிற்றப்பட்ட விஞ்ஞான ஆசிரியர்களான திரு. சி. கணேசராசா அவர்களும் செல்வி. க. பாமினி அவர்களும் இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளனர்.

| | | |
|---|---|---|
| **இலங்கை அதிபர் சேவை தரம்** | **1** | **- 01** |
| **இலங்கை அதிபர் சேவை தரம்** | **2 II** | **- 01** |
| **பட்டதாரிகள்** | | **- 02** |
| **பயிற்றப்பட்டோர்** | | **- 17** |
| **தொண்டர் ஆசிரியர்** | | **- 01** |

தற்போது எமது பாடசாலையில் 375 மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றனர்.

| | | |
|---|---|---|
| **ஆரம்பப்பிரிவு** | தரம் | **01 - 05 வரை - 111** |
| **கனிஷ்டபிரிவு** | தரம் | **06 - 11 வரை - 245** |
| **சிரேஷ்டபிரிவு** | தரம் | **12 - 13 வரை - 15** |
| | | 375 |

# பரீட்சைப் பெறுபேறுகள்

அகவை எண்பத்திரண்டு நிரம்பிய எமது பாடசாலையின் கல்விப்பாரம்பரியம் நீண்டதொரு வரலாற்றைக் கொண்டு விளங்குகின்றது. பிரத்தியேகக் கல்வியைப் பெறும் வாய்ப்புக்கள் எட்டாக் கனியாகவே அமைந்தபோது பாடசாலைக்கல்வியையே நம்பி வரும் மாணவர்களே எமது பாடசாலையில் கணிசமான பங்கை வகிக்கின்றனர். அவர்களின் உடல், உளத் தேவையறிந்து கற்றல், கற்பித்தல் நிகழ்த்தும் எமது ஆசிரியர்களின் தன்னலமற்ற சேவையாலும் வழிகாட்டலாலும் எம் மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று எமக்கும் தமக்கும் பெருமை சேர்த்து வருகின்றனர். இவ்வருடம் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 27 பேர் தோற்றி இருவர் புலமைப்பரிசில் பேறு (சித்தி) பெற்றுள்ளனர். அத்துடன் 50 வீதமான மாணவர்கள் 80 புள்ளிகளுக்கு மேற் பெற்றுள்ளனர்.

க.பொ.த.(சா.த)ப் பரீட்சையில் தோற்றியோரின் சித்தி வீதம் 30 ஆகும். அவர்களுள் ஐவர் எமது பாடசாலையிலே கலைப்பிரிவில் கல்வி பயில்கின்றனர். சிறந்த பெறுபேறாக 2A, 4C, 3S பெற்று செல்வி. ஆ. கார்த்திகா எமக்குப் பெருமை சேர்த்துள்ளார். அவருக்கு எமது பாராட்டுக்கள் உரித்தாகுக.

க.பொ.த. (உ.த)ப் பரீட்சையில் தோற்றியோரின் சித்தி வீதம் 70 ஆகும். சிறந்த பெறுபேறாக, செல்வி சி. லட்ஷாயினி என்பவர் BCS பெற்றுள்ளார்.

# மாணவர் முதல்வரணி

கடமையுணர்வு, கண்ணியம், கட்டுப்பாடு ஆகியவற்றுக்கு அமைவாக இவ்வணி செயற்பட எமது உப அதிபர் திரு ச.சிவானந்தராசா அவர்கள் வழிகாட்டியாக உள்ளார். சிரேஷ்ட மாணவ தலைவனாக செல்வன். நா. ஜெயகாந்தனும் சிரேஷ்ட மாணவ தலைவியாகச் செல்வி. மா. கயல்விழியும் செயற்பட்டு வருகின்றனர்.

# இணைப்பாட விதானச் செயற்பாடுகள்

பாடசாலைக் கலைத்திட்டத்துக்கு ஏற்ப கற்பிக்கப்பட்டபோதும் மாணவர்களை முழுமையாக்கவும் அவர்களின் உள்ளார்ந்த திறன்களை விருத்தி செய்யவும் கலாரசனைகளை இனங்கண்டு வெளிக்கொணரவும் வளர்க்கவும் இணைப்பாடவிதானச் செயற்பாடுகள் அவசியமாகின்றன. அந்தவகையில் எமது பாடசாலையும் மெய்வல்லுநர்போட்டி, மொழித்தினப் போட்டிகள், சமய விழாக்கள் முதலானவற்றைச் சிறப்பாகக் காலம் தவறாது நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# விளையாட்டுத்துறை

மாணவர்களின் உடல், உள வளர்ச்சியில் விளையாட்டுத்துறையும் பெரும்பங்கு வகிக்கின்றது. எமது பாடசாலையும் கல்விப்பகுதியினரால் நடத்தப்படும் அனைத்து விளையாட்டு நிகழ்வுகளிலும் பங்குபற்றுகின்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இவ்வருடம் எமது பாடசாலையின் விளையாட்டு மைதானத்தைச் செப்பனிட வடகிழக்கு மாகாண இளைஞர் விவகார கல்வி பண்பாட்டு கலாசார அலுவல்கள் அமைச்சினால் ரூபாய் 75000/= நிதி ஒதுக்கப்பட்டு யாழ்மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்ற மேற்பார்வையில் வேலைகள் நடைபெற்று வருகின்றன.

ஆசிரியர் திரு. செ. ஆனந்தீஸ்வரன் அவர்களின் வழிகாட்டலில் 15, 17 ,19 ஆகிய வயதுப்பிரிவினர் கோட்டமட்டக் கரப்பந்தாட்டப் போட்டியில் பங்கு பற்றினர். இவ் அணிகளில் 17 வயதுப் பிரிவினர் முதலாம் இடத்தையும் 19 வயதுப்பிரிவினர் மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளனர். 17 வயது அணியினர் வலயமட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்று மாவட்டமட்டப் போட்டியில் இவ்வருடம் பங்குபற்றியுள்ளனர்.

ஆசிரியர் திருமதி வ. இராமச்சந்திரன் அவர்களின் நெறிப்படுத்தலில் 17, 19 பிரிவு அணியினர் பயிற்சி பெற்று கோட்டமட்ட வலைப்பந்தாட்டப் போட்டியில் பங்குபற்றிச் சிறப்பாக விளையாடினர்.

ஆசிரியர் தி. பரமேஸ்வரன் அவர்களின் பயிற்றுவிப்பில் 14, 16 வயது உதைபந்தாட்ட அணியினர் கோட்டமட்டப் போட்டியில் கால் இறுதியாட்டம்வரை பங்குபற்றியுள்ளனர்.

ஆசிரியர் செல்வி. இ. மதிவதனி அவர்களின் வழிகாட்டலில் மெய்வல்லுநர் வீரர்கள் கோட்டமட்டப் போட்டியிலும் வலயமட்டப் போட்டியிலும் பங்குபற்றிப் பல பரிசில்களைப் பெற்றுப் பெருமை சேர்த்துள்ளனர்.

# நூலகம்

"வாசிப்பதால் மனிதன் பூரணமடைகின்றான்." என்பது ஆன்றோர் வாக்கு. எமது பாடசாலையின் நூலகமும் மாணவர்களின் அறிவுப்பசிக்கு வழிகாட்டுவதாகவும் அமைந்துள்ளது. ஆசிரியை திருமதி. வ. குமாரலிங்கம் அவர்களின் மேற்பார்வையின் கீழ் இயங்கும் எமது நூலகம் இவ்வருடமும் பல புதிய நூல்களைக் கொள்வனவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மன்றங்கள்

மாணவர்களின் தலைமைத்துவப் பண்பு ஆளுமை விருத்தி, தன்னம்பிக்கை, கடமைக் கூறுகளுக்கு ஏற்ப கருமமாற்றல் போன்ற திறன்களை விருத்திசெய்யும் வகையில் பல மன்றங்கள் இங்கு இயங்கி வருகின்றன. பாடஆசிரியர்கள் பொறுப்பாக இருந்து வழிகாட்டி வருகின்றனர்.

# சைவமன்றம்

இம் மன்றத்தின் பொறுப்பாசிரியராக எமது கணித ஆசிரியை திருமதி. சு. கிருபானந்தராசா அவர்கள் பணியாற்றுகின்றார். காலைப் பிரார்த்தனை நாயன்மார் குரு பூசைகள், மாதா பிதா குரு தெய்வ வழிபாடு, நவராத்திரி பூசை என்பவற்றை இவ்வருடம் இம்மன்றம் சிறப்பாக முன்னெடுத்துச் சென்றுள்ளது. அவ்விழாக்களை ஒட்டிப் போட்டிகள் நடாத்தி மாணவர்க்குப் பல பரிசில்களையும் வழங்கி அவர்களின் பேச்சாற்றல், பாடலோதல், நடிப்பாற்றல், மாலை கட்டல், கோலம் போடல் திறன்களையும் ஊக்குவித்து விருத்தி செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. அழகியல் போட்டியைக் கண்காட்சியுடனும் கலைநிகழ்வுகளுடனும் இவ்வருடம் இம்மன்றம் சிறப்பாக நடத்தியுள்ளதுடன் போட்டிகளையும் நடத்தி விழா எடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# உயர்தர மாணவர் மன்றம்

இம் மன்றத்தின் பொறுப்பாசிரியராக திரு. செ. பாலச்சந்திரன் அவர்கள் இருந்து நெறிப்படுத்தி வருகின்றார். வருடந்தோறும் உயர்தர ஒன்றுகூடல் நிகழ்வைச் சிறப்பாகநடத்தி வருகின்றது. இம் மன்றம் பாடசாலையின் வரைபடத்தை அடையாளப்படுத்திக் காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தமிழ் மன்றம்

இம்மன்றத்தின் பொறுப்பாசிரியராக செல்வி க. மாதினி அவர்கள் கடமையாற்றுகின்றார். இவ்வருடமும் தமிழ்த்தினப்போட்டியை பாடசாலை மட்டத்தில் நடத்தி பரிசில்களும் வழங்கிக் கௌரவித்துள்ளது. இவ்வருடம் "பாடையேறினும் ஏடது கைவிடேல்" எனும் நாடகம் கோட்டமட்டத்தில் முதலாம் இடம்பெற்று வலயமட்டப் போட்டியில் பங்குபற்றிப் பாராட்டுப் பெற்றமை குறிப்பிடத்தக்கது. நாடகத்தை எழுத்துருவாக்கம் செய்த திரு. பா. பாலமுரளி அவர்களையும் நெறியாள்கை செய்த எமது உபஅதிபர் அவர்களையும் பாராட்டுகின்றேன்.

# ஆரம்பக்கல்வி மன்றம்

இம்மன்றத்தின் பொறுப்பாசிரியராக திரு. த. தயானந்தன் அவர்கள் கடமையாற்றுகின்றார். ஏனைய ஆரம்ப பிரிவு ஆசிரியர்களான திரு. தி. பரமேஸ்வரன், செல்வி. கை. கங்கா திரு. யோ. சிவகோணேசலிங்கம் ஆகியோர் உறுதுணையாய் இருந்து செயற்பட்டுவருகின்றனர். உடல், உள திறன்களை வளர்க்கப் பல செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது. இவ்வருடம் கோட்ட மட்டப் போட்டியில் சிறுவர் நாடகம் ஒன்றினை மேடையேற்றி பாராட்டைப் பெற்றுள்ளனர் சித்திரக்கண்காட்சியை குடும்ப மட்டப் பாடசாலையில் காட்சிப்படுத்தி தெரிவு செய்யப்பட்டுள்ளனர். வாய்பாடு மனனப்போட்டியில் தரம் தரம் 5 மாணவி முதலாம் இடத்தையும் தரம் 3, 4 ஆகிய வகுப்புக்களில் மூன்றாம் இடங்களையும் பெற்றுப் பெருமை சேர்த்துள்ளனர். அவர்கட்கு எனது பாராட்டுக்கள்.

# சாரணியம்

ஆசிரியர் திரு. தி. பரமேஸ்வரன் அவர்களின் வழிகாட்டலில் இவ்வணி இயங்கி வருகின்றது. இவ்வருடமும் சாரணர் பாசறையில் கலந்து தம் திறன்களை சிறந்த முறையில் வெளிப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஆசிரியகழகம்

இக்கழகம் திரு. செ. ஆனந்தீஸ்வரனைத் தலைவராகவும் செல்வி. மாதினி அவர்களைச் செயலாளராகவும் திருமதி. குமாரலிங்கம் அவர்களைப் பொருளாளராகவும் கொண்டு திறம்பட இயங்கி வருகின்றது.

பாடசாலையின் அனைத்து நிகழ்வுகளிலும், ஒத்துழைப்பையும் ஆயிரக்கணக்கில் நிதியுதவியையும் வழங்கிவரும் இக்கழகத்தின் சேவை மேலும் தொடர வாழ்த்துகின்றேன். இக்கழகத்தின் உறுப்பினராகிய ஆசிரியை செல்வி. இ. மதிவதனி, ஆசிரியர் திரு. செ. பாலச்சந்திரன் ஆகியோர் தரம் 2 II இற்கு உயர்வு பெற்றுள்ளனர். அவர்களையும் இவ்விடத்தில் பாராட்டுகின்றேன்.

தரம் 5 புலமைப்பரிசில் சித்தியெய்திய மாணவர்களைப் பாராட்டி விழா எடுத்துள்ளது. வலிகாமம் வலயத்தில் இவ்வாண்டு நல்லதிபராக பாராட்டுப் பெற்ற அதிபராகிய என்னையும் பாராட்டி வாழ்த்து ஒன்றினைப் பத்திரிகையில் பிரசுரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பாடசாலை அபிவிருத்திச்சங்கம்

இச்சங்கம் அதிபரைத் தலைவராகக் கொண்டு இயங்குகின்றது. செயலாளராக திரு. வே. சண்முகநாதன் அவர்களும் பொருளாளராக எமது ஆசிரியை திருமதி. சு. கிருபானந்தராசா அவர்களும் கடமையாற்றுகின்றனர். பல்வேறு வகையில் இச்சங்கம் பாடசாலையின் வளர்ச்சிக்கு உதவி வழங்கி வருகின்றது.

இவ்வருடம் கல்வி அமைச்சின் உதவியுடன் எமது மாணவர்களுக்கு கற்றல் கற்பித்தலுக்கான கட்புல செவிப்புல சாதன அறையை ரூபா 1,00000/= நிதிகொண்டு ஒழுங்கமைத்துக் கருவிகளையும் கொள்வனவு செய்யும் பொறுப்பையும் ஏற்று சிறப்பாக நிறைவேற்றித் தந்துள்ளமை பாராட்டத்தக்கது.

## பழைய மாணவர் சங்கம்

இச்சங்கத்தின் தலைவராக அதிபர் அவர்களும் செயலாளராக திரு. சு. செல்லத்துரை அவர்களும் பொருளாளராக திரு. த. தயானந்தன் அவர்களும் கடமையாற்றுகின்றனர். பாடசாலையின் அபிவிருத்திக்கு நிதியுதவி வழங்கி ஆதரவு நல்கி வருகின்றது.

இச்சங்கத்தின் உறுப்பினராகிய Dr. த. பேரானந்தராசா அவர்கள் எமது தொண்டர் ஆசிரியர் ஒருவர்க்கு மாதந்தோறும் ரூபாய் 1000/= அன்பளிப்புச் செய்து ஊக்குவித்து வருகின்றார். அவர்களை இவ்விடத்தில் பாராட்டுவதுடன் சீர்தூக்கிப் பார்க்கின்றேன்.

## வேண்டுகோள்

எமது படசாலையின் மேல்மாடிக் கூரை மழைக்கு ஒழுகுகின்றது. அக்கூரையைச் செப்பனிட்டுக் கொள்வதற்கும் பாரடசாலை விளையாட்டு மைதானத்தினை மட்டப்படுத்திக் கொள்ளவும் ஆவன செய்யுமாறு வலிகாமம் கல்விவலயப் பணிப்பாளர் அவர்களை விநயமாகக் கேட்டுக் கொள்கின்றேன்.

Music teacher

# நன்றிகள்

எமக்குத் தோன்றாத் துணையாய் நின்று அருள் பாலித்துக் கொண்டிருக்கும் நடராசப்பெருமானின் பாதக்கமலங்களைப் பணிந்து நன்றியறிதலைத் தெரிவிக்க விழைகின்றேன். எமது அழைப்பை ஏற்று, வருகை தந்து, ஆசியுரை வழங்கி, அமர்ந்திருக்கும் வணக்கத்துக்குரிய பிரம்மஸ்ரீ கு. நகுலேஸ்வரக் குருக்கள் அவர்கட்கு எனது நன்றிகள் உரித்தாகுக.

நிர்வாக வேலைப்பளுக்களின் மத்தியிலும் எமது அழைப்பை ஏற்று பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் வலிகாமம் வலயக்கல்விப்பணிப்பாளர் திருமதி. றெஜினா இருதயநாதன் அவர்களுக்கும், சிறப்பு விருந்தினராகக் கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் தெல்லிப்பழைக் கல்விக்கோட்ட கல்விப்பணிப்பாளர் திரு. ச. கைலாசநாதன் அவர்கட்கும் எனது நன்றிகள்.

நிறுவுநர் நினைவுரையை நிகழ்த்த வருகை தந்திருக்கும் யா.ஃஸ்கந்வரோதயக் கல்லூரியின் பிரதிஅதிபர் செஞ்சொற்செல்வர் திரு.ஆறுதிருமுருகன் அவர்கட்கும் எனது நன்றியறிதலைத் தெரிவிக்கின்றேன்.

இன்றைய விழா இனிதே சிறப்புற நிதியுதவி செய்த அன்பர்களுக்கும் ஞாபகார்த்தப் பரிசில்களை வழங்கிச்சிறப்பிக்கும் அன்பர்களுக்கும் நன்றியறிதலை உரித்தாக்குகின்றேன். குறிப்பாகத் தெல்லிப்பழை துர்க்கையம்மன் தேவஸ்தானத்திற்கும் இணுவில் அண்ணா தொழிலகத்தினருக்கும் மில்க்வைற் தொழிலகத்தினருக்கும் இவ்விடத்தில் எனது மனங்கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எமது அழைப்பை ஏற்று வருகை தந்து விழாவைச் சிறப்பித்துக் கொண்டிருக்கும் சகோதரப்பாடசாலை அதிபர்கள், மற்றும் ஆசிரியர்களுக்கும் நன்றிகள் உரித்தாகுக.

இப்பாடசாலை பெருமை பெற்றிட, சாதனைகள் படைத்திட உதவிக்கரம் நீட்டும் பா.அ.சங்கத்தினருக்கும் பழைய மாணவர் சங்கத்தினருக்கும் நலன்விரும்பிகளுக்கும் மனமார்ந்த நன்றிகள்.

விழாவைச் சிறந்த முறையில் நடாத்த ஒத்துழைப்பு வழங்கிய எமது ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்து விடைபெறுகின்றேன்.

- நன்றி -

சுபம்

28.11.2004

**அ. பேரம்பலம்**
அதிபர்

# பரிசளிப்பு விழா

## 2004 - 11 - 28

## பரிசில் பெறும் மாணவர்கள்

**தரம்: 1**

| | | |
|---|---|---|
| 1) செல்வி. | இ. பபிதினி | ஒன்றிணைந்த பாடங்கள் |
| 2) செல்வி. | ஜெ. பவன்ஜா | ஒன்றிணைந்த பாடங்கள் |
| 3) செல்வன். | சு. சுவிஸ்ரன் | ஒன்றிணைந்த பாடங்கள் |

**தரம்: 2**

| | | |
|---|---|---|
| 4) செல்வன். | க. கபிலன் | ஒன்றிணைந்த பாடங்கள் |
| 5) செல்வி. | வி. பிரியங்கா | ஒன்றிணைந்த பாடங்கள் |
| 6) செல்வன். | தி. மதுராதிபன் | ஒன்றிணைந்த பாடங்கள் |

**தரம்: 3**

| | | |
|---|---|---|
| 7) செல்வி. | தி. தாரணி | ஒன்றிணைந்த பாடங்கள் |
| 8) செல்வி. | ஜெ. அனித்தா | ஒன்றிணைந்த பாடங்கள் |
| 9) செல்வி. | சி. விதுசனா | ஒன்றிணைந்த பாடங்கள் |

**தரம்: 4**

| | | |
|---|---|---|
| 10) செல்வி. | ப. டினோஜா | ஒன்றிணைந்த பாடங்கள் |
| 11) செல்வன். | ஜெ. ஜெயப்பிரதாபன் | ஒன்றிணைந்த பாடங்கள் |
| 12) செல்வன். | தி. அனோஜன் | ஒன்றிணைந்த பாடங்கள் |

**தரம்: 5**

| | | |
|---|---|---|
| 13) செல்வி. | சு. சுவேதிகா | ஒன்றிணைந்த பாடங்கள் |
| 14) செல்வி. | வி. ஷர்மிளி | ஒன்றிணைந்த பாடங்கள் |
| 15) செல்வி. | சி. சிந்துயா | ஒன்றிணைந்த பாடங்கள் |

**தரம்: 6**

| | | |
|---|---|---|
| 16) செல்வி. | க. கம்சிகா | தமிழ், சுற்றாடல், அழகியல், ஆங்கிலம். |
| 17) செல்வி. | ம. கிருஷாயினி | சைவசமயம் |
| 18) செல்வன். | பா. சிவானுஜசர்மா | கணிதம், சுகாதாரம். செயல் முறைத்திறன். |
| 19) செல்வி. | செ. மேரி ஜெசிமலர் | றோமன் கத்தோலிக்கம் |

**தரம்: 7**

| | | |
|---|---|---|
| 20) செல்வன். | ஆ. பிரகாஷ் | தமிழ், சைவசமயம், கணிதம், விஞ்ஞானம், சுகாதாரம். |
| 21) செல்வி. | மா. அர்ச்சனா | சமூகக்கல்வி |
| 22) செல்வன். | ப. தினுசன் | சமூகக்கல்வி |
| 23) செல்வி. | அ. ஜெசிபா | சங்கீதம், செயல்முறைத் திறன். |

**தரம்: 8**

| | | |
|---|---|---|
| 24) செல்வி. | ம. கார்த்தாயினி | சைவசமயம், தமிழ், ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம், சமூகக்கல்வி, சுகாதாரம். |
| 25) செல்வி. | சி. தீபியா | சித்திரம் |
| 26) செல்வி. | செ. மேரி சந்திரமலர் | றோ.க., சங்கீதம். |
| 27) செல்வி. | கா. நளாயினி | செயல்முறைத்திறன் |

**தரம்: 9**

| | | |
|---|---|---|
| 28) செல்வி. | த. பிரசன்யா | தமிழ், சைவசமயம், ஆங்கிலம், விஞ்ஞானம், சுகாதாரம், சங்கீதம். |
| 29) செல்வி. | ச. பிரபாலினி | கணிதம் |
| 30) செல்வன். | க. தினேஸ் | சமூகக்கல்வி. சித்திரம் |
| 31) செல்வி. | யூடித் ஜஸ்மின் | செயல்முறைத்திறனும், தொழில்நுட்பத்திறனும். |

**தரம்: 10**

| | | |
|---|---|---|
| 32) செல்வி. | தி. டிலக்சனா | தமிழ், கணிதம், சுகாதாரம், சித்திரம். |
| 33) செல்வி. | செ. மேரி புஸ்பமலர் | றோ.க., சமூகக்கல்வி, விஞ்ஞானம், வர்த்தகம். |
| 34) செல்வி. | ந. கிறேஸ் நிசாந்தினி | ஆங்கிலம், சங்கீதம். |
| 35) செல்வி. | சி. ஜீவிதா | சைவசமயம் |
| 36) செல்வி. | ஆ. சர்மிளா | விவசாயம் |
| 37) செல்வி. | ம. சுதர்சினி | மனைப் பொருளியல் |

**தரம்: 11**

| | | |
|---|---|---|
| 38) செல்வன். | பொ. மதியழகன் | றோ.க.,ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம், சமூகக்கல்வி. |
| 39) செல்வன். | சி. ரிசாந்தன் | சைவசமயம் |
| 40) செல்வன். | செ. சுகீர்த்தனா | மனைப் பொருளியல் |
| 41) செல்வன். | சி. றஜீபன் | சித்திரம் |
| 42) செல்வி. | செ. அஸ்வெனா | சங்கீதம் |
| 43) செல்வி. | த. பிறிந்தியா | தமிழ் |
| 44) செல்வன். | வி. நிசாந்தன் | விவசாயம் |
| 45) செல்வி. | து. டஜிதா | வர்த்தகம் |

**தரம்: 12**

| | | |
|---|---|---|
| 46) செல்வி. | மா. கயல்விழி | தமிழ், இந்துநாகரிகம், ஆங்கிலம். |
| 47) செல்வி. | இ. சர்மினி | அளவையியல். |
| 48) செல்வி. | செ. மேரி செல்வமலர் | சங்கீதம் |

**தரம்: 13**

| | | |
|---|---|---|
| 49) செல்வி. | சி. லட்சாயினி | தமிழ், அளவையியல். இந்துநாகரிகம். |
| 50) செல்வி. | த. சுகன்சா | ஆங்கிலம் |

# சிறப்புப் பரிசில்கள்

| | | | |
|---|---|---|---|
| 51) | செல்வி. | க. கம்சிகா | 2003 தரம் 5 புலமைப்பரிசில் (124புள்ளி) |
| 52) | செல்வி. | சு. சுவேதிகா | 2004 தரம் 5 புலமைப்பரிசில் (139புள்ளி) |
| 53) | செல்வி. | வி. ஷர்மிளி | 2004 தரம் 5 புலமைப்பரிசில் (132புள்ளி) |
| 54) | செல்வி. | ஆ. கார்த்திகா | க.பொ.த. (சா/த) சிறந்த பெறுபேறு |
| 55) | செல்வி. | சி. லட்சாயினி | க.பொ.த. (உ/த) சிறந்தபெறுபேறு |
| 56) | செல்வன். | வ. கஜேந்தன் | சிறந்த கரப்பந்தாட்ட வீரன் |
| 57) | செல்வன். | ம. ஜோர்ஜ்நியூபேட் | சிறந்த உதைப்பந்தாட்ட வீரன் |
| 58) | செல்வன். | பொ. மதியழகன் | சிறந்த துடுப்பாட்ட வீரன் |
| 59) | செல்வி. | யோ. யூடித் ஜஸ்மின் | சிறந்த வலைப்பந்தாட்ட வீராங்கனை |
| 60) | செல்வன். | ம. ஜோர்ஜ்வாசிங்ரன் | சிறந்த மெய்வல்லுநர் வீரன் |
| 61) | செல்வி. | யோ.யூடித்ஜஸ்மின் | சிறந்த மெய்வல்லுநர் வீராங்கனை |
| 62) | செல்வி. | ம. கார்த்தாயினி | சிறந்த கட்டுரையாளர் (தமிழ்) |

**வழங்குபவர்: திரு. க. மோகன் - அமரர் திருமதி கா. ஆனந்தராசா நினைவாக**

63) செல்வன். சி. றஜீபன் சிறந்த ஓவியர்

**வழங்குபவர்: திரு.வே.சிவநாதன் அவர்கள் -**
***அமரர்கள். சி.றமணன் சி.அருளினி நினைவாக***

| | | | |
|---|---|---|---|
| 64) | செல்வன். | அ. வினோத் | சிறந்த பாடகர் |
| 65) | செல்வன். | க. நாவரசன் | சிறந்த நடிகர் (கீ.பி.) |
| 66) | செல்வன். | தி. மகிந்தன் | சிறந்த நடிகர் (மே.பி.) |
| 67) | செல்வி. | வி. ஷர்மிளி | சிறந்த நடிகர் (கீ.பி.) |
| 68) | செல்வி. | தி. டிலக்சனா | சிறந்த நடிகர் (மே.பி.) |
| 69) | செல்வன். | ஜே. ஜெயறோசன் | சிறந்த சாரணன் |
| 70) | செல்வன். | மு. கேதீஸ் | சிறந்த சைவசமயி |

**வழங்குபவர்: திருமதி. கு. செல்வராணி - அமரர். செ. குமாரசாமி நினைவாக**

| | | | |
|---|---|---|---|
| 71) | செல்வி. | செ. அஸ்வெனா | சிறந்த சைவசமயி |
| 72) | செல்வன். | நா. ஜெயகாந்தன் | சிறந்த நூலகப் பயன்பாடு |
| 73) | செல்வி. | வி. ஷர்மிளி | சிறந்த பாடசாலை வரவு |
| 74) | செல்வி. | ம. கார்த்தாயினி | ஆங்கில மொழித்திறன் |

**வழங்குபவர்: திரு. பா. தர்மபாலா - திரு. செ. பாலசுப்பிரமணியம் நினைவாக**

| | | | |
|---|---|---|---|
| 75) | செல்வன். | நா. ஜெயகாந்தன் | மெய்யவன் |
| 76) | செல்வி. | மா. கயல்விழி | மெய்யவள் |

# ஞாபகார்த்தப் பரிசில் வழங்குபவர் விபரம்

## 2004

| | வழங்குபவர் | நினைவிற்குரியவர் | துறை |
|---|---|---|---|
| 1) | திருமதி. த. கிருபாசக்தி | ஏழூர் இராஜரட்ணம் | மொழியறிவு |
| 2) | சேதுப்பிள்ளை குடும்பம் | திருமதி. க. சேதுப்பிள்ளை | உ.த, சா.த. சிறந்தபெறுபேறு |
| 3) | டாக்டர். க. பாலசுப்பிரமணியம் | திரு. திருமதி. கந்தையா | விஞ்ஞானம், கணிதம். |
| 4) | சைவப்புலவர் திரு. சு. செல்லத்துரை | — | மெய்யவன் மெய்யவள் |



றிச ஓவ்செற் பிறின்டேர்ஸ்

கே. கே. எஸ். றோட், சுன்னாகம்.

# நிகழ்ச்சி நிரல்

- ❊ மங்கள விளக்கேற்றல்
- ❊ இறை வணக்கம்
- ❊ கல்லூரிக் கொடியேற்றலும் கொடிக் கீதமும்
- ❊ வரவேற்புரை
- ❊ ஆசியுரை
- ❊ அதிபரறிக்கை
- ❊ நிறுவுநர் நினைவுப் பேருரை
- ❊ பரிசளிப்புப் பேருரை
- ❊ சிறப்பு விருந்தினர் உரை
- ❊ பரிசில் வழங்கல்
- ❊ கலை நிகழ்வுகள்
    1) சிறுவர் குழு நடனம்
    2) இசை விருந்து
    3) English Song
    4) நாடகம் (வாழக் கல்மின்)
- ❊ நிறைவுரை
- ❊ பாடசாலைக் கீதம்

# பாடசாலைக் கீதம்

வாழிய மெய்கண்டான் மாவித்தியாலயம்
நீடிசை யோடு பல் லூழி

ஏழூர் ராசரத் தினமா மகிபன்
இளவா லைக்கருள் நிதியம்
வாழக் கல்மின் எனும் பேர் இலட்சிய
வாசக மாண்பொருள் தந்தே...... (வாழிய)

தாமரை ஏடு தீபம்நல் இடபம்
தாங்கிய இலச்சினை யாலே
தண்ணளி ஞானம் ஒளியொடு தருமம்
தரணியில் நாம்பெற நின்றே.... (வாழிய)

கல்வியும் கலையும் ஒழுக்கமும் பெருக
காண்பரும் புகழெமக் காக்கி
வாழ்க..... வாழ்க.... வாழ்க....
மாநிலம் போற்றிட வாழ்க.... (வாழிய)